பாடம் 3

# உங்களுக்குக் கேட்டதா?

**யாருக்காவது நீங்கள் எப்போதாவது காத்திருந்திருக்கிறீர்களா? இயேசு தம்முடைய சீடர்களிடம் பரிசுத்த ஆவிக்காகக் காத்திருக்கும்படி சொன்னார். பரிசுத்த ஆவி வந்தபோது அவர்கள் எதிர்பார்க்காத காரியங்கள் நிகழ்ந்தன.**

எருசலேம் நகரத்தில் எங்குப் பார்த்தாலும் மக்கள் வெள்ளம்; உலகின் பல பகுதிகளிலும் இருந்து ஏராளமான மக்கள் அங்கு வந்திருந்தார்கள். தூசி நிறைந்த தெருக்களில் கழுதைகளின் சத்தமும், குழந்தைகளின் குரலும் கேட்ட வண்ணமாய் இருந்தன. பெந்தெகொஸ்தே பண்டிகையைக் கொண்டாடுவதற்காக எருசலேம் நகருக்கு பல்லாயிரக் கணக்கான யூதர்கள் வந்திருந்தார்கள்.



சீடர்களும், மற்ற விசுவாசிகளும் எப்போதும் போலத் தங்கள் இடத்தில் கூடி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்; அப்பொழுது அற்புதமான காரியம் ஒன்று நடந்தது. அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை.

திடீரென்று ஒரு வினோதமான சத்தம் கேட்டது; காற்று வீசுவதுபோல் தெரிந்தது. ஆனால், அது காற்று அல்ல; புயல் வீசுவது போல் தெரிந்தது; ஆனால், அது புயல் அல்ல; அந்தச் சத்தம் சீடர்கள் கூடியிருந்த வீட்டிற்குள் நுழைந்தது. அந்தச்சத்தத்தைக் கேட்ட மக்கள் இந்த வீட்டில் என்ன நடக்கிறது என்று எட்டிப்பார்த்தார்கள்.

சத்தம் இப்போது நின்றுவிட்டது. விசுவாசிகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அப்போது அக்கினி மயமான நாவுகள் தோன்றி ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தது. பரிசுத்த

## மனன வசனம்

**நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.**

**அப்போஸ்தலர் 2:17.**

ஆவியானவர் அவர்களை நிரப்பினார். புதிய எண்ணங்கள் அவர்கள் உள்ளத்தில் தோன்றின; நடந்ததை அவர்களால் நம்பமுடியவில்லை. கர்த்தரைப் பலத்த சத்தத்துடன் ஸ்தோத்திரிக்க ஆரம்பித்தார்கள்.

வீட்டிற்கு வெளியே இருந்த கூட்டமும் பெருக ஆரம்பித்தது. 'இங்கு என்ன நடக்கிறது?' என்பதுதான் எல்லோருடைய கேள்வியாக இருந்தது. ''நான் கேட்ட சத்தத்தை நீங்கள் கேட்டீர்களா?'' என்று ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டார்கள்.

அந்த வீட்டில் இருந்த ஒவ்வொருவரும் பலத்த சத்தமாகப் பேசிக்கொண்டிருப்பதையும் கேட்டார்கள். என்ன ஆயிற்று?.

சீரியாவிலிருந்து வந்த ஒரு மனிதன் தன் கையை நீட்டி, ''அங்கே யாரோ ஒருவன் என்னுடைய மொழியிலே பேசுவதை நான் கேட்கிறேன்'' என்றான். எகிப்திலிருந்து வந்த இன்னொருவன், ''அங்கே யாரோ ஒருவன் என்னுடைய மொழியில் பேசுவதை நான் கேட்கிறேன்'' என்றான்.

அதற்குள் அங்கிருந்த இன்னொருவன், ''உள்ளே இருக்கிறவர்கள் குடித்திருக்கிறார்கள்; குடிவெறியில் ஏதோ பிதற்றுகிறார்கள்'' என்றான்.

அப்போது பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். பேதுரு பேச ஆரம்பித்தார், ''எருசலேமில் இப்போது இருக்கிற என்னுடைய உடன்சகோதரர் ஆகிய யூதரே நான் சொல்வதைக் கேளுங்கள்; நீங்கள் நினைப்பது போல இவர்கள் மது



## செய்தி

**தேவனுக்குச் சேவைசெய்ய, தேவன் நமக்குத் திறமைகளைத் தருகிறார்.**

அருந்தவில்லை'' என்றார். இயேசுவைப் பற்றி அவர்களுக்குச் சொன்னார்; அவர்களுக்காக இயேசு பிறந்ததையும், இறந்ததிலிருந்து அவர் மீண்டும் உயிரோடு எழும்பி, இப்போது பரலோகம் சென்றிருப்பதையும் சொன்னார். 'நீங்கள் அவரை விசுவாசித்தால் உங்கள் பாவங்களை மன்னித்து உங்களுக்கும் பரிசுத்த ஆவியின் வரங்களையும் தருவார்' என்றார்.

மக்கள் அமைதியாகக் கேட்டார்கள். ஏறக்குறைய 3000பேர் அன்றைக்கு, தேவனுடைய சபையிலே சேர்ந்தார்கள்.

கண்ணே! பரிசுத்த ஆவியானவர் உன் வாழ்க்கையையும் நிரப்புவார்; இயேசுவைப் பற்றிச் சொல்வதற்கு அவர் உனக்கும் உதவி செய்வார். இயேசுவிடம் கேட்பாயா?

**செய்முறை:**

*அன்று தேவனுடைய பிள்ளைகள் கூடி ஜெபித்தபோது, பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல அறையை நிரப்பியது எது? பாடத்தைப் படி; மாறிக்கிடக்கும் எழுத்துகளைச் சரிப்படுத்தி விடையைக் கண்டுபிடி.*

**புதிர் 3**

**ப வி த் ஆ சு த ரி**

________________

